2017 ஜூலை 19] [திரு. சபா. ராசேந்திரன்]

பரிசீலித்து, வேலை நிறுத்தத்தை உடனே முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், எங்கள் மாவட்டத்தின் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

(ஐ) ராதாபுரம் தொகுதி, தாது மணல் ஆலைகளை மீண்டும் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராதாபுரம் தொகுதியிலேதான் நீண்ட நெடிய கடற்கரை இருக்கிறது. அங்குள்ள தாது மணல் ஆலைகள் நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்டுள்ளன. அரசு அதிகாரிகள் தற்போது அவற்றில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சுமார் இருபதாயிரம் தொழிலாளர்கள் நேரடியாகவும், சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக ஆய்வுகளை முடித்து, அந்த ஆலைகளைத் திறந்து, தொழிலாளர்களுடைய வீடுகளில் அடுப்பு எரிகிற நிலையை உருவாக்க வேண்டுமென இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

(ஒ) கிருஷ்ணகிரி தொகுதி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், கடைசியாக உங்களை அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் கடும் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தினந்தோறும் மக்கள் குடங்களை எடுத்துக் கொண்டு, ஆங்காங்கே அலையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் சொல்லி,